பாடல் 3: புவிமீது பூவாய் வந்த (திருவிருந்து)

இயல்: சேவியர்
இசை மற்றும் பாடியவர்: நிஷா
இசை இயக்கம்: Fr..டெனிஸ் வாய்ஸ்

பல்லவி

புவி மீதில் பூவாய் வந்த பாலகனே

பாவ நெஞ்சம் மீட்க வந்த மாபரனே

தூங்கச் சொல்லித் தாலாட்டு

உனக்குச் சொல்ல விரும்பாய் நீ

விழிக்கச் சொல்லி எங்களுக்கு

விளக்கம் சொன்ன அன்பன் நீ.

சரணம் 1

கட்டில் மீது தவழாமல் புல் தொட்டில் மீதில் தவழ்ந்தது ஏன்

ஏழை நெஞ்சம் எப்போதும் வரவேற்கும் என்பதை சொல்லிடவோ ?

நாட்டின் தலைவரை நாடாமல் சிறுஆட்டின் இடையரைப் பார்த்தது ஏன்

மாட்சி என்பது மாளிகையால் வரமுடியாதென்பதை சொல்லிடவோ ?

சரணம் 2

ஏழை நெஞ்சம் பாராய் நீ உடன் உள்ளே தரிசனம் தாராய் நீ.

சின்ன மனதைக் காண்பாய் நீ சில தூதர் செய்திகள் சொல்வாய் நீ

வா வென்னும் வார்த்தை மட்டும் நாவில் என்றும் பாடுமே

வா வென்ற உந்தன் குரல் பாதம் என்றும் ஓடுமே.

This song is prepared for Iniya Ithayangal whatsapp group and linked in www.manavai.com